# ஈஸியா செய்யுங்க...

# வீட்டை அழகாக்குங்க...!

## கஸூதி வொர்க் ஹேங்கர்





பூமாதேவி

இந்த வாரம் நாம பார்க்கப் போற கைவேலைபாட்டின் பெயர் கஸூதி வொர்க். இந்த வகை வேலைபாடை பொதுவாக துணிகளில்தான் செய்வார்கள். நாம் இதை மர போர்டு அல்லது ப்ளைவுட்டில் செய்யப் போறோம். இதை சொல்லிக் கொடுக்கப்போறவங்க பூமாதேவி.







### தேவையான பொருட்கள்:

ப்ளைவுட் அல்லது மர போர்டு: 1

டிஸ்டெம்பர், டெக்ச்சர் ஒயிட்: தேவைக்கு

பிரஷ்: 1

பென்சில்: 1

புளோரிகா 3 டி: இரண்டு கலர்களில்

பால் கவர்: தேவைக்கு

செல்லோ டேப்: தேவைக்கு

கத்திரிக்கோல்: தேவைக்கு

கயிறு: தேவைக்கு

எம்.சீல்: தேவைக்கு

### செய்முறை :

முதலில் மரபோர்டில் பிரஷ் கொண்டு, டிஸ்டெம்பர் அல்லது டெக்ச்சர் ஒயிட்டை நெருக்கமாக தடவிக் கொள்ளவும். இதை சிறிது நேரம் காயவிடவும்.

இப்போது பென்சில் கொண்டு நமக்கு வேண்டிய வடிவத்தை வரைந்துக் கொள்ளவும்.

பால் கவரை கோன் போல் சுருட்டி அதில் தேவையான அளவு புளோரிகா 3 டியை நிரப்பிக் கொண்டு, பென்சிலால் வரைந்த வடிவத்தின் மேலேயே மிக மெல்லியதாக வரைந்துக் கொண்டே வரவும். இதை சிறிது நேரம் காயவிடவும்.

அதன்பின்னர் மரபோர்டின் ஓரங்களில் செல்லோ டேப் கொண்டு ஒட்டி விடவும்.

இந்த போர்டின் பின்பகுதியில் தேவையான அளவு கயிற்றை துண்டாக்கி, அதை எம்,சீல் கொண்டு ஒட்டி, காய்ந்தவுடன் சுவற்றில் அலங்காரமாக மாட்டலாம்.





### இதை செய்யும் போது கவனிக்க வேண்டியவை:

★ இதை மர போர்டில்தான் செய்ய வேண்டும் என்பதில்லை. தடிமனான எந்த வகை போர்டிலும் செய்யலாம்.

★ கோனிற்கு பால் கவர் அல்லது தடிமனான எந்த கவரையும் இதற்கு பயன் படுத்தலாம். வரைந்து கொண்ட வடிவத்திற்கு ஏற்ப நுனியை சிறியதாக கட் செய்யவும். அப்போதுதான் போர்டில் மிக மெல்லியதாக வரைய வரும். புளோரிகா 3டி யை கோனில் நிரப்பாமல் அப்படியே நேரடியாக வரையும் போது பூக்கள் பெரிதாக வருவதால் பார்க்க அழகாக இருக்காது.

★ இதை வால்ஹேங்கராகவும், சாவி மாட்டி வைக்கும் போர்டாகவும் பயன் படுத்தலாம்.

-சங்கீதா..